# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

ஆணை நாள் 25.06.2024

முன்னிலை

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 7063/B/2023**

திரு.சி.சீனிவாசன் — மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி பொறியாளர், நீ.வ.து.,
கிருஷ்ணகிரி நீர்த்தேக்க திட்ட
உபகோட்டம்,
கிருஷ்ணகிரி அணை - 635 101. — பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வழக்கு ஏற்கனவே இவ்வாணையத்தால் 30.04.2024 அன்று எடுத்துக்கொள்ளப்பட்ட விசாரணையின் மறுவிசாரணையாகும்.

2. இவ்வாணையத்தால் இன்று (25.06.2024) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.சி.சீனிவாசன் அவர்களும், பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர், திரு.சை.சையத்ஜஹீருதின், உதவிப்பொறியாளர், கிருஷ்ணகிரி நீர்த்தேக்க திட்ட உபகோட்டம், கிருஷ்ணகிரி அணை அவர்களும் ஆஜரானார்கள்.

3. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1) மனுவின் கீழ், 01.02.2023 தேதியிட்ட மனுவில், கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்ட உபகோட்டம், கிருஷ்ணகிரி அணை, உதவிப் பொறியாளர்(நீ.வ.து)ஆகப் பணிபுரிந்து வரும் திரு.பொறி.வே.காளிபிரியன் எந்த கல்வித்தகுதியின் அடிப்படையில், எந்த முறையில் எந்த ஆண்டு எந்த தேதியில் எந்த அரசுத்துறையில் எந்த அலுவலகப் பணியில், எந்தப் பதவியில் அரசுப்பணியாளராகப் பணியில் சேர்ந்தார் என்பது உள்ளிட்ட 12 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது), மாவட்ட ஆட்சியரகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். உரிய தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, மனுதாரர் 08.03.2023 அன்று பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவினை, மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 17.03.2023ம் தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக தகவல் அளித்துள்ளார். முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, மனுதாரர் 15.04.2023 அன்று பிரிவு 19(3)ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 30.04.2024 அன்று இவ்வாணையத்தால்

விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அன்றைய விசாரணையில் கீழகண்டவாறு ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது:-

1. *பொதுத் தகவல் அலுவலர்/உதவி பொறியாளர்,நீ.வ.து.,கிருஷ்ணகிரி நீர்த்தேக்க திட்ட உபகோட்டம், கிருஷ்ணகிரி அணை அவர்கள், இவ்வாணை கிடைக்கப்பெற்ற 1 வார காலத்திற்குள், மனுதாரர் 1ம் இனத்தில் கோரிய தகவல்களை பிரிவு 7(6)ன் கீழ் கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக அனுப்பி, மனுதாரர் அதனை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவல்களை இவ்வாணையத்தில் நடைபெறவிருக்கும் மறுவிசாரணை நாளான 25.06.2024 அன்று இவ்வாணையத்தில் நேரடியாக சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகின்றது.*
2. *மனுதாரர் கோரிய 12 இனங்களில், 1ம் இனத்தை தவிர ஏனைய 11 இனங்களில் மனுதாரர், பொறி.வே.காளிபிரியன், உதவிப்பொறியாளர் அவர்களுடைய தனிப்பட்ட தகவல்களை கோரியுள்ளதால், அத்தகவல்கள் மூன்றாம் நபரின் தனிப்பட்ட தகவல்கள் என்று இவ்வாணையம் தீர்மானித்து, அத்தகவல்கள் வழங்குவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட தகவல்கள் என்று பதிவு செய்கின்றது.*
3. *25.06.2024 முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும் விசாரணையில், இவ்வழக்கின் பொதுத் தகவல் அலுவலர், உதவி பொறியாளர்,நீ.வ.து., கிருஷ்ணகிரி நீர்த்தேக்க திட்ட உபகோட்டம், கிருஷ்ணகிரி அணை, அவர்களும், மனுதாரர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அவலுவலம், கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அவலுவலம், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர்கள் கட்டாயமாக ஆஜராக வேண்டுமென்று உத்தரவிடப்படுகின்றது. மாவட்ட வருவாய் அலுவலர், ஆஜராகாத பட்சத்தில், மேற்படி நீதிபேராணை மனு குறித்தும், இவ்வழக்கு குறித்தும் விரிவான அறிக்கை மற்றும் அவரது கருத்துருக்களை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது), கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் மூலம் இவ்வாணையத்தில் நேரடியாக சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகின்றது.*

4. மேற்படி உத்தரவிற்கிணங்க இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர்/உதவி பொறியாளர்,நீ.வ.து.,கிருஷ்ணகிரி நீர்த்தேக்க திட்ட உபகோட்டம், கிருஷ்ணகிரி அணை அவர்கள், மனுதாரர் 1ம் இனத்தில் கோரிய, பொறி.வே.காபிரியன், உதவிப்பொறியாளரின் கல்வி தகுதி, பணிநியமனமுறை மற்றும் தனியர் முதன் முதலில் அரசு துறையில் பணியில் சேர்ந்த நாள், ஆண்டு, பணியேற்ற அலுவலகம் குறித்த விவரங்கள், தனியரின் பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ள 7 பக்க நகல்கள் மனுதாரருக்கு இவ்வலுவலக கடித எண்.கோ.42/2024/உசெபொ(கே.ஆர்.பி), நாள் 14.06.2024ம் தேதியிடப்பட்ட பதிவஞ்சல் வாயிலாக மனுதாரருக்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்றும் எடுத்துரைத்து, வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

5. மேலும், பொதுத் தகவல் அலுவலர் 30.04.2024 நடைபெற்ற வழக்கின் உத்தரவு தங்களுக்கு கிடைக்கப்பெறவில்லை என்றும், மனுதாரர் தங்கள் பொது அதிகார அமைப்பிற்கு வருகைபுரிந்து உத்தரவு நகலை காண்பித்ததன் அடிப்படையில் தான் இன்றைய விசாரணைக்கு ஆஜரானதாகவும், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களுக்கும் மேற்படியான விசாரணை தேதி ஏதும் தெரியவராத காரணத்தினால் இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை என்றும் தெரிவித்தார். இதுகுறித்து இவ்வாணைய தபால் பிரிவு அலுவலர்களிடம் கேட்டறிந்தபோது, 30.05.2024 அன்று இவ்வாணையத்திலிந்து இவ்வழக்கின் உத்தரவு நகல் மாவட்ட வருவாய் அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம், பொதுத் தகவல் அலுவலர்/உதவிப்பொறியாளர், கிருஷ்ணகிரி நீர்த்தேக்க திட்ட உபகோட்டம், கிருஷ்ணகிரி அணை மற்றும் மனுதாரர் ஆகியோர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவித்து, அனுப்புகை பதிவேட்டினை சமர்ப்பித்தனர். மேற்படி அனுப்புகை பதிவேட்டினை பரிசீலனை செய்கையில், பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் மனுதாரருக்கு 30.05.2024 அன்று உத்தரவு நகல் அனுப்பப்பட்டுள்ளதை காணமுடிகின்றது. விசாரணையில் ஆஜரான மனுதாரர் இவ்வாணையத்திலிருந்து தனக்கு உத்தரவு நகல் கிடைக்கப்பெற்றதாகவும், அதன் அடிப்படையில் தான் இன்றைய விசாரணைக்கு ஆஜரானதாகவும் தெரிவித்தார்.

6. இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகின்றது;-

- **30.04.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கிணங்க, பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு 1ம் இனத்திற்கான தகவல்களை வழங்கியுள்ளதால், ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கு முற்றாக்கம் செய்யப்படுகின்றது.**

- **இவ்வாணையத்திலிருந்து 30.05.2024 அன்று அனுப்பப்பட்ட உத்தரவு நகல் கிடைக்கப்பெறவில்லை என்று பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளதை இவ்வாணையம் ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்வாணைய தபால் பிரிவு ஆவணங்களின் அடிப்படையில், மேற்படியான உத்தரவு நகல் பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் மனுதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனுதாரருக்கு உத்தரவு நகல் கிடைக்கப்பெற்ற நிலையிலும், ஏன் பொது அதிகார அமைப்பிற்கு கிடைக்கப்பெறவில்லை என்பது குறித்து, பொதுத் தகவல் அலுவலர், உதவிப்பொறியாளர், கிருஷ்ணகிரி நீர்த்தேக்க திட்ட உபகோட்டம், கிருஷ்ணகிரி அணை அவர்கள் அவர் தரப்பு விளக்க அறிக்கையினையும், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களுடைய விளக்க அறிக்கையினையும் பெற்று, இவ்வாணையத்திற்கு 09.08.2024-க்குள் பதிவஞ்சலில் அனுப்பிவைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகின்றது.**

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 7063/B/2023</u>**

**<u>பெறுநர்</u>**

மாவட்ட வருவாய் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி பொறியாளர், நீ.வ.து.,
கிருஷ்ணகிரி நீர்த்தேக்க திட்ட
உபகோட்டம்,
கிருஷ்ணகிரி அணை - 635 101.

திரு.சி.சீனிவாசன்,த/பெ.சின்னசாமி,
3/211, திம்மாபுரம் (ம) அஞ்சல்,
காவேரிபட்டிணம் வழி,
கிருஷ்ணகிரி மாவட்டம் - 635 112.

Copy to: File
Sj/Ps-09/07/24